1981 ஏப்ரல் 15]

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குக் கூட விவரம் இல்லை என்றால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தகவல் தன்னிடம் இல்லை என்று சொல்லும்போது என்ன செய்ய முடியும்?

திரு. துரைமுருகன் : இதற்கெல்லாம் பதிலைத் தெரிந்து கொண்டு வரவேண்டாமா ? The Hon. Minister must ccme prepared.

நவமணி தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பாக்கிப் பணம்.

* வினா எண். 697 திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ''நவமணி'' நாளிதழ் நின்றுவிட்டபோதிலும் அதனுடைய தொழிலாளர்களுக்கு இதுவரை சேரவேண்டிய எந்தப் பணமும் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) விரைவில் தீர்க்கப்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(இ) ''நவமணி'' அலுவலகத்தில் இருக்கும் அச்சு இயந்திரங்கள், மற்றப் பொருள்களின் விவரம் இவ்வரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) மற்றும் (ஆ) ''நவமணி'' நாளிதழை நடத்தி வந்த கூட்டுறவு நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் கலைக்கப்பட்டது. இதற்காக நியமிக்கப்பட்ட கலைப்பு அதிகாரி நிர்வாகத்திற்குச் சொந்தமான சொத்துக்களை வரப்பெற்றும் (தம் வசப்படுத்தி—(Realise the assets) கலைக்கப்பட்ட நிர்வாகம் கொடுக்க வேண்டியவர்களுக்கு முழுமையாகவோ அல்லது விகிதாச்சாரப்படியோ நிலைமைக்குத் தக்கவாறும், தக்க வரிசைப்படியும் சட்டப்படி கொடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார். கலைப்பு அதிகாரியின் நிர்வாகத்தில் தலையிடுவது சட்டப்படி தக்கதன்று.

(இ) தெரியும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நவமணியை தொழில் கூட்டுறவாக ஆக்கி கொடுக்கப்பட்ட கடன் ரூ. 12 இலட்சமும் நவமணியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ? நவமணியின் ஆசிரியர்கள்

திரு. ராமலிங்கம், திரு. சண்முகவேல் ஆகிய இருவரும் காரணம் இல்லாமல் டிஸ்மிஸ் செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க தொழில் கோர்ட்டு இட்ட ஆணையை ஹைக்கோர்ட் ஊர்ஜிதம் செய்த பிறகும் நஷ்டயீடு கொடுக்காமல் இருப்பதைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கத்தின் பெருவாரியான சொத்துக்கள் விற்றுப் பணமாக்கும் நிலையில் உள்ளதினால், முன்னாள் ஊழியர்களின் விண்ணப்பங்கள் மீது இன்னும் பட்டுவாடா செய்ய முடியாமல் நிலுவையில் உள்ளன. கலைப்பு அதிகாரி பழைய ஊழியர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டிய தொகையினை தீர்மானம் செய்து வருகிறார். கலைப்பு அதிகாரி தேவையான நடவடிக்கை எடுத்து விசாரித்து அவரவர்களுக்கு உரிய பணத்தை முன்னுரிமை வரிசைப் பிரகாரம் நிதி நிலைமைக்கு ஏற்றவாறும், சட்டத்தின்படியும் தொகையைக் கொடுப்பார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நவமணி பத்திரிகை அலுவலகத்தில் இருந்த அச்சு இயந்திரங்கள் போன்ற சொத்துக்கள் எல்லாம் மக்கள் குரல் பத்திரிகைக்கு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. அவ்வாறு கொடுக்கப்பட்டது விற்பனை மூலமாகவா? ஏலத்தின் மூலமாகவா? டெண்டர்கள் மூலமாகவா? என்பதை அறிய விரும்புவதோடு அந்த விற்பனையின் மதிப்பு எவ்வளவு? அதிலே யார் யார் கலந்து கொண்டார்கள். விற்பனையான இயந்திரங்கள் என்னென்ன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தத் தகவல்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கு பதில் சேகரித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நவமணியின் அச்சுஇயந்திரங்களை விற்பனை செய்வதில் டெண்டர் கோரப்பட்டதா? அதில் அதிகப்பட்சத் தொகை என்ன? ஜனாதிபதி ஆட்சியின்போது கொடுக்கப்பட்ட தொகையைவிட அதிகமாக தொகையைக் கொடுத்து மக்கள் குரல் பத்திரிகை அதை வாங்கியிருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவலும் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவமணியின் இயந்திரங்களை மக்கள் குரலுக்குக் கொடுத்தது சம்பந்தமான தகவல்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே அச்சடித்து உறுப்பினர்களுக்கு நகல் அளிக்கும் வகையில், அவை மேசைமுன் வைக்கப்படுமா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விரிவான அறிக்கை அச்சடித்து அவைமுன் வைக்கப்படும்.

கிராமத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை.

* வினா எண். 698—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமத் தொழிலாளர்களுக்கு கிராஜுட்டி திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென மாநில தொழிலாளர் அமைச்சர்களின் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) 19–7–80 மற்றும் 20–7–80 ஆகிய தினங்களில் மாநில தொழிலாளர்கள் அமைச்சர்களின் மகாநாடு புதுடெல்லியில் நடத்தப்பட்டது. கிராமத் தொழிலாளர்களுக்கு கிராஜுட்டி திட்டத்தை அமுல்படுத்துவது சம்பந்தமாக அம்மகாநாடு விவாதித்தது. 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள கிராம மற்றும் இன்பார்மல் (informal) பகுதிகளை உள்ளடக்கிய அனைத்து நிறுவனங்களுக்கும் பணிக்கொடை வழங்கல் சட்டம் பொருந்துமாறு செய்யப்பட வேண்டும் என அம் மகாநாடு கருத்து கொண்டுள்ளது. அவ்வாறே, இங்ஙனம் செய்யப்படும் முன்பு பணிக்கொடை நிதி ஏற்படுத்துவது சம்பந்த